**செய்தி வெளியீடு – 8.5.2010**

## காஷ்மீர் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் தாக்கி வீரமரணம் அடைந்த இராணுவ வீரர் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம், நடுவூர் கிராமத்தைச் சேர்ந்த நாயக் பி. செல்வகுமார் 23.2.2010 அன்று ஜம்மு – காஷ்மீர் மாநிலம் பாரமுல்லா மாவட்டத்தில், தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட சண்டையின்போது, குண்டடிபட்டு வீரமரணம் அடைந்தார்.

மறைந்த இராணுவ வீரர் செல்வகுமாரின் தியாகத்தைப் போற்றி, அவரது குடும்பத்தார்க்கு கார்கில் படை வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (8.5.2010) ஆணையிட்டுள்ளார்.

***